# ஹெல்த் இன்சூரன்ஸ் சூப்பர் மார்க்கெட்!

**எல்லா இன்சூரன்ஸ் கம்பெனியையும் ஒப்பிட்டுப் பார்த்து, உங்களுக்கு தகுந்த இன்சூரன்ஸை வாங்குங்க!**



**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று எதை நினைத்து சொன்னாங்கன்னு தெரியாது. ஆனால் நோய் வந்துட்டா ஆஸ்பத்திரி செலவுல அரசனும் ஆண்டி ஆயிடுறான். அரசனே ஆண்டியானா, சாதாரண நடுத்தர மக்கள் நிலை என்னவாகும்? அதற்காகப் பிறந்ததுதான் ஹெல்த் இன்சுரன்ஸ் காப்பீட்டுத் திட்டம்! ஏழை மக்களைப் பாதுகாக்கும் வகையில், ஏழை மக்கள் அரசு மருத்துவமனைகளில் மட்டுமில்லாது, தனியார் மருத்துவமனைகளிலும் சேர்ந்து, ஆரோக்யத்தைப் பாதுகாப்பதற்காக மத்திய அரசு பல ஆயிரம் கோடிகளை ஒதுக்கியுள்ளது. மறைந்த ஆந்திர முதலமைச்சர் ஒய்.எஸ்.ஏ. இராஜசேகர் ரெட்டி அவர்கள், மத்திய அரசின் இத்திட்டத்தைச் சரியாகப் பயன்படுத்தி, இந்தியாவிலேயே முதன்முறையாக ஏழைகளுக்கு இலவச காப்பீட்டுத் திட்டத்தை வழங்கினார். இன்சூரன்ஸ் பிரிமியத்தை அரசாங்கமே இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்குக் கொடுத்து விடுகின்றன. ரெட்டியைப் பின்பற்றி, தமிழக அரசும் இத்திட்டத்தை கலைஞர் காப்பீட்டு திட்டம் என அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகின்றது.

இந்த ஹெல்த் இன்சுரன்ஸ் திட்டம் ரொம்ப குறைந்த அளவுக்குத்தான் மருத்துவச் செலவைக் கொடுக்கும். நடுத்தர மக்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் படுத்துக்கொண்டால், பல லட்சம் செலவாகிறது. இதற்காக அரசாங்கத்தால் நடத்தப்படும் ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனங்கள், அப்பல்லோ, டிகேவி, ஸ்டார் ஹெல்த் போன்ற பல நிறுவனங்கள் இன்சூரன்சை நடுத்தர மக்களுக்கு வழங்குகின்றன. ஆனால் அந்த ஹெல்த் இன்சுரன்சைப் படித்துப் புரிந்து கொள்ள, டாக்டராலயும் முடியாது. படித்த பொருளாதார நிபுணருக்கும் புரியாத புதிர்தான். புரியாத புதிரை ஓரளவுக்குப் புரிய வைக்க, தென் இந்தியாவிலேயே முதன்முறையாக (ஈசிஇன்சூரன்ஸ்இந்தியா.காம்) முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் பெற்று வருகின்றது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் கடந்த ஒரு வருடமாக இந்த இணைய தளத்தை உபயோகித்து வருகின்றார்கள். ஈசியாக இந்த இணையதளத்தில் இன்சூரன்ஸ் திட்டங்களை அறிந்து பெறலாம். இண்டெர்நெட்டில் போய் உங்கள் குடும்பத்தைப் பற்றி விவரத்தைக் கொடுத்தால் 17 இன்சுரன்ஸ் நிறுவனங்களிடம் இருந்து உங்களுக்கு எவ்வளவு பிரிமியத்தொகை ஆகும் என்றும், அது மட்டுமல்லாது ஒவ்வொரு கம்பெனியின் நிறை, குறைகளையும் வெளியிடும் வகையில் இந்த இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு கம்பெனி ஏஜெண்டிடம் இன்சூரன்ஸ் வாங்கினால் அவர்கள் அந்தக் கம்பெனியின் பாலிசியை மட்டும் விற்பார்கள். மற்ற கம்பெனிகளை ஒப்பிட்டுப் பார்த்து, நிறை, குறைகளை நாம் அறிந்து, எது நமக்குச் சரியாக இருக்குமோ, அதை நாம் வாங்க முடியாது. ஹெல்த் மட்டுமின்றி, கார், பைக், வீடு, ஆயுள் காப்பீடு போன்ற எல்லா கம்பெனிகளின் பாலிசிகளை ஒப்பிட்டு, இந்த இணையத்திலேயே நாம் கிரடிட் கார்டு, பேங்க் டிரான்ஸ்ஃபர் மூலம் வாங்கி பயன் பெறலாம். அது மட்டுமின்றி இணையதள வசதி இல்லாதவர்கள், கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டால் (91 95512 90073) இன்சூரன்ஸ் வாங்க உதவுவார்கள். மருத்துவமனை செலவைச் சமாளிக்க முடியாமல் கடனாளியாகாதீர்கள். உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஹெல்த் இன்சுரன்ஸ் பெற்று பயனடையுங்கள். ■